Registered as a Newspaper

When only
The best is
Good Enough



Buy
Solide Pumps

# உதயன்

விலை ரூ 2/50

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர்: 4 சுக்கில ஆவணி மீ 11 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 முஹறம் பிறை 24 (28-08-1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 228

## யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலைகளை இயங்க வைக்க விசேட குழு ஒன்று முயற்சிக்கும்

### நேற்றைய மாநாட்டில் முடிவு

— உதயன் அலுவலகச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம் ஆக. 28

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாடசாலைகளை இயங்க வைக்கும் பொருட்டு, ஆக்க பூர்வமான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஏற்பாடாகி உள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ். கல்வித் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற முக்கிய மாநாடு ஒன்றில் இதற்கென ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டதாகவும் மிக நம்பிக்கையாக அறிய வந்தது.

யாழ். கல்வித் திணைக்களத்தில் நேற்று முக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது, பிரஸ்தாப மாநாட்டில் கோட்டக் கல்வி அதிகாரிகளும், பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர்.

மாவட்டத்தில் உள்ள பாடசாலைஒவ்வொன்றினதும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலிருந்து தலா இரண்டு பிரதிநிதிகளும் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பலரும் மாநாட்டுக்கு சமுகம் அளித்திருந்தனர்.

★ பாடசாலைகளுக்கு மீண்டும் மாணவர்களைச் சமுகமளிக்கச் செய்வது.

★ மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டிய நடவடிக்கைகள்.

ஆகிய இரண்டு விடயங்

(6ஆம் பக்கம் பார்க்க)

### ஒட்டுசுட்டானில் தாக்குதல்; 2பொலீஸாரும் ஜவானும் பலி

ஒட்டுசுட்டானில் இடம் பெற்ற தாக்குல் சம்பவம் ஒன்றில் இலங்கைப் பொலீஸார் இருவரும் அமைதிப் படை ஜவான் ஒருவரும் உயிரிழந்தனர்;

இச் சம்பவம் குறித்து ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்ததாவது:

'அமைதிப்படை முகாம் மீது நடத்திய தாக்குதலின் போது குறிதவறி வீதியில் சென்றுகொண்டிருந்த பொலீஸாரின் வாகனம் சேதமடைந்தது:

அப்போது இரு பொலீஸார் உடல் கருகி இறந்தனர், படுகாயமடைந்த இந்திய அமைதிப்படை ஜவான் ஒருவர் பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானார்' — என்று கூறின.

இதேவேளை —

இராணுவ வாகன அணி ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 2 இலங்கைப் பொலீஸார் கொல்லப்பட்டனர். 6 பேர் காயமடைந்தனர் என்றும் —

அமைதிப்படை ஜவான் ஒருவரும் இதில் பலத்த காயமடைந்தார் என்றும் இந்தியத் தரப்பில் கூறப்பட்டது: (ஒ-எ)

### சுன்னாகம் சென்ற ரயில்!

சரக்கு ரயில் ஒன்று நேற்று பரீட்சார்த்தமாக சுன்னாகம் வரை சேவையில் ஈடுபடுத்தப் பட்டது:

ரயில் சேவையை யாழ் நகரிலிருந்து காங்கேசன்துறை வரை விஸ்தரிப்பதற்கு ஏதுவாக ரயில்பாதை திருத்தப்படுவதைத் தொடர்ந்து நேற்றுச் சுன்னாகம் வரை பரீட்சார்த்த சேவை நடத்தப்பட்டது:

இந்த ரயிலில் எடுத்துவரப்பட்ட 'ஹெவி டீசல்' சுன்னாகம் கொண்டு செல்லப்பட்டு அங்கு மின்சார சபைக்கு வழங்கப்பட்டது.

கடந்த பல வருடங்களாக யாழ் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் ஊடாகவே சுன்னாகம் மின்சார சபைக்கு 'ஹெவி டீசல்' விநியோகிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது: (ஓ-9)

### இராணுவ ஆஸ்பத்திரியில் பொலீஸாருக்கும் இடம்!

அரச ஆஸ்பத்திரிகளில் அனுமதி மறுக்கப்படும் காயமடைந்த பொலீஸாரை இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கலாம் என்று இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது,

பாதுகாப்புப் படையினருக்கு அரச ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை அளிக்கக் கூடாது என்று ஆஸ்பத்திரி ஊழியருக்கு எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது தெரிந்ததே: (ஓ-எ)

### நல்லூரில் நாளை தேர்

யாழ்ப்பாணம், ஆக. 28

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா நாளை (செவ்வாய்க்கிழமை) காலை 7 மணிக்கு நடைபெற இருக்கிறது.

நாளை காலை 6 மணிக்கு விசேட பூசைகள் தொடங்கி 7 மணிக்கு முருகனின் தேர்ப் பவனி ஆரம்பமாகும்;

தேர்த் திருவிழாவை ஒட்டி குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்தும் விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன: பல்லாயிரக் கணக்கான அடியார்கள் நாளை கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-3)

### நாளை தேர்த் திருவிழா சிறப்பிதழ்

நாளைய உதயனுடன் நல்லூர் தேர்த்திருவிழா சிறப்பிதழ் எட்டுப் பக்கங்களில் வெளிவருகிறது.

ஆறுமுகப் பெருமானின் அழகிய நான்கு வர்ணப் படங்கள் - இரண்டுடனும்-

அறிஞர்கள், கவிஞர்களின் சிறப்புக் கட்டுரை, கவிதைகளுடனும் -

கந்தன் புகழ் பேசும் கருவூலமாக வெளிவருகிறது:

மொத்தம் 14 பக்கங்கள்:

முருகன் அடியார்கள் அனைவரும் பேணிப் பாதுகாத்து வைக்க வேண்டிய பொக்கிஷம்:

நாளைய உதயனுக்குத் தவறாது இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்;

### பளைப் பகுதியில் நேற்றும் இருவர் சுட்டுக் கொலை!

பச்சிலைப்பள்ளி, ஆக. 28

பளைப்பகுதியில் உள்ள கோவில் காட்டுச் சந்தியிலும், பளைப் பட்டினப் பகுதியிலும் நேற்றும் இரு சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டன

கோவில்காட்டுச் சந்தியில் காணப்பட்ட சடலம் பளை பிரதேச சபையில் கடமையாற்றிய மாசாரைச் சேர்ந்த எஸ்: ஆறுமுகம் என்பவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

### இறுதிக் கிரியைகள் திருமலையில் நடந்தது

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 28

ஈரோஸின் மாணவ அமைப்பான ''கைஸ்'' உறுப்பினர் இருவரதும் இறுதிக் கிரியைகள் நேற்று திருகோணமலையில் இடம்பெற்றன:

திருகோணமலையில் நேற்று முன்தினம் ''கைஸ்'' உறுப்பினர்களான பிரபா, சங்கர் ஆகியோர் கொலையுண்டனர் என்பது தெரிந்ததே; (ஓ)

### மந்திகைப் பகுதியில் நடந்த அசம்பாவிதங்கள்

புலோலி - மந்திகைப் பகுதியில் சனிக்கிழமை பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் ரவிகரன் திருஞான சம்பந்தபிள்ளை (வயது 19) என்பவர் ஆவார்.

இதேவேளை நேற்று மாலை மந்திகை வைத்திய சாலைக்குச் சமீபமாக இடம் பெற்ற மோதல் ஒன்றை தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகமும், ஷெல்வீச்சுக்களும் மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டது. (ஓ-9)

### முச்சந்தி முரளி



அரசமைப்பை மாத்திறதும், ஜனாதிபதி முறை, பிரதமர் முறையை மாத்திறதுமா இருக்கிறதிலேயே இந்த நாட்டு அரசியல் சழிஞ்சு போயிடும் போலை இருக்குது......!

### சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஆக 28

யாழ்-மணிக்கூட்டு வீதி — கன்னாதிட்டி வீதிச் சந்தியில் நேற்றுக்காலை இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்

சடலம் பின்னர் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டது: (ஓ-9)

### ஈரோஸ் உறுப்பினர்கள் கிழக்கில் கடத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஆக 28

கிழக்குப் பகுதியில் பரவலாக ஈரோஸ் இயக்க உறுப்பினர்கள் பலர் கடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது;

நேற்றும் நேற்றுமுன்தினமும் அடுத்தடுத்து கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன;

இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் ஈழவர் ஜனநாயக முன்னணி அலுவலகம் பத்திரிகைகளுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பு வருமாறு:

நேற்று முன்தினம் பிற்பகல் 5.00 மணியளவில் திருக்கோவிலில்தோழர்கள் உதயன் யோகராசா, தட்சணாமூர்த்தி ஆகிய மூவரும் கடத்தப்பட்டுள்ளார்கள்; இவர்களுக்கு என்னநடந்ததென்று தெரியவில்லை.

நேற்று முன்தினம் பிற்பகல் 6.00 மணியளவில் அக்கரைப்பற்றில் தோழர்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

### அனைத்து கட்சிகளும் அங்கம் வகிக்கும்

## காபந்து அரசை நிறுவுமாறு எதிரணி கூட்டாக வேண்டுகோள்

கொழும்பு, ஆக 28

அனைத்து அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்கும் காபந்து அரசு ஒன்று உடனடியாக நிறுவப்படவேண்டும்; என்றுஐந்து எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன:

கூட்டறிக்கையில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது:

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஐக்கிய சோஷலிசஅணி சார்பில் திரு. அத்தாவுட செனவிரத்தின, ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கச் செயலதிபர் திரு. கே. பத்மநாபா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம்.எச் எம் அஷ்ரப் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன ஆகியோர் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்:

★ ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும்.

★ அரசமைப்புச் சட்டத்திற்குத் திருத்தங்கள்கொண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சி

### விவசாயபீட முன்சுவர் முற்றாக உடைத்து நாசம்!

யாழ்ப்பாணம், ஆக. 28

கிளிநொச்சியில் அமைக்கப் பட்டு வரும் விவசாயபீடத்தின் முன்பக்கச் சுவர் முற்றாக உடைக்கப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது:

சமீபத்தில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின்போது முன்பக்கச் சுவர் சேதமடைந்திருந்தது.

ஆனால் சென்ற வாரம் சுவர் முழுவதும் உடைக்கப்பட்டதாக பல்கலைக் கழக நிர்வாகத்துக்குப் புகார் செய்யப் பட்டுள்ளது;

அங்கு நாட்டப்பட்டிருந்த விளம்பரப் பலகையையும் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது;

இவ்விடயம் சம்பந்தமாக விசாரித்து ஆராய்வதற்குப் பல்கலைக்கழக பொறியியலாளர் குழு ஒன்று அடுத்தவாரம் கிளிநொச்சி செல்ல இருக்கிறது. (ஓ-3)

### சுபநேரம்

(28 - 8 - 1989)

ஆவணி—12 திங்கட்கிழமை

நக்ஷத்திரம்: புனர்பூசம்

சுபநேரம்:

12-05 முதல் 01-35 வரை

ஞாகுகாலம்:

07-35 முதல் 09-05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்;

நல்லூர் கந்தசாமி சப்பறம்

### கண்டியில் 12 சடலங்கள்!

கொழும்பு, ஆக 28

கண்டி பொலீஸ் பகுதியில் நேற்று அடையாளம் தெரியாத 12 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக அரசு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டது.

பௌத்த பிக்கு ஒருவர் இனந்தெரியாதோரால் விகாரையில் இருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டார்; (ஓ-எ)

### ஜனசக்தி உரிமைச் சான்றிதழ் 11 தொகுதிகளாக வழங்கப்படும்

### வடக்கு, கிழக்கில் 65 உ. அ. பிரிவுகள் தெரிவு

கொழும்பு, ஆகஸ்ட் 28

ஜனசக்தித் திட்டத்தின் கீழ் நன்மை பெற தகுதியானவர்கள் என்று தெரிவு செய்யப் பட்டவர்களுக்கு உரிமைச் சான்றிதழ்களைப் பதினொரு தொகுதிகளாக வழங்க அரசு முடிவு செய்து உள்ளது.

முதல் தொகுதியில் இடம் பெறுபவர்களுக்கு அடுத்த மாத இறுதியில் ஜனசக்தி சான்றிதழ் வழங்கப்படவுள்ளது;

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஜனசக்தி சான்றிதழ் வழங்கப்படும் அட்டவணை உதவி அரச அதிபர் பிரிவு வாரியாக கீழே தரப்படுகிறது.

**முதல் தொகுதி**

யாழ்ப்பாணம், மாந்தை, பூநகரி, வாழைச்சேனை, திருக்கோவில், பதியத்தலாவ, பொத்துவில், திருமலை நகரம், செட்டிக்குளம், வவுனியா சிங்களப் பிரிவு.

**2 ஆவது தொகுதி**

மருதங்கேணி, வேலணை, முசலி, வவுனியா தமிழ்ப் பிரிவு, மாந்தை கிழக்கு, பளை, மண்முனை தென்மேற்கு, மஹா ஓயா, மூதூர்.

**3 ஆவது தொகுதி**

சங்கானை, நானாட்டான், வவுனியா வடக்கு, தணுக்காய், கட்டைவெளி, ஏறாவூர் பற்று, கல்முனை, சேருவில;

**4 ஆவது தொகுதி**

காரைநகர், வேலணை, மன்னார், புதுக்குடியிருப்பு, போரதீவு பற்று, ஆலையடிவேம்பு, கிண்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஞானக்கதிர்
அன்பு - அறநெறி - ஆன்மீகம்

மூன்றாவது இதழ் இப்போது அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!

★ நல்லூர் கந்தனின் நான்கு வர்ண அழகிய அட்டைப் படம்.
★ உள்ளே நான்கு பக்க நல்லைக்கந்தன் உற்சவமலர்:
★ வேதத்தில் விஞ்ஞானம்;
★ வாரியார் வாய்மொழி.
★ உபநிடதங்கள் பற்றிய அறிமுகம்.
★ திருமகள் திருவருள் பெற...
★ நல்ல காலம் பற்றி (ஜோதிடம்)
★ பிள்ளையார் தீர்ப்பு, கந்தன்கருணை (சமயக்கதைகள்)
★ மாவிட்டபுரம், மருதடி, சதுமலை அம்மன் கோவில்கள் பற்றிய கட்டுரைகள்;

மற்றும் பல...

மாதந்தோறும் மலரும் இந்து சமய ஞானக் களஞ்சியம்:

இன்றே வாங்குங்கள்:

நல்லூர் ஆலயத்திலும் விற்பனையாகிறது;

விலை ரூபா 5 மட்டுமே;

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**தேவை**

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள வெட்டுனர், தையல் வேலை தெரிந்தோர் பயிலுனர்கள், உதவியாளர் மேற்பார்வையாளர் தேவை: உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 86 C/o உதயன், யாழ்ப்பாணம்: (1597)

**மணமகன் தேவை**

அந்தணர் குல 31 வயது; 7 இல் செவ்வாய் உடைய மணமகளுக்கு அதே இன மணமகன் தேவை; 584. C/o Uthayan. (1748)

**உடன் விற்பனைக்கு**

பொமேரியன் 1½வயது ஆண் நாய் உடன் விற்பனைக்கு உண்டு. மாலை 3 மணி முதல் பார்வையிடலாம். தொடர்பு: சுந்தரகுமார், மருத்துவ பிரதிநிதி, 81 மானிப்பாய் றோட், தாவடி. (1753)

**விற்பனைக்கு**

Honda Recoлditoned C-90, C-70, C-50, Chaly, C.D-90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு Anton Enterprises. No: 390, மெயின் வீதி, சுன்டுக்குளி, யாழ்ப்பாணம். (1833)

யமாகா MATE-50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு T. கதிர்காமத்தம்பி; 15, மூளாய் ஒழுங்கை, மானிப்பாய். [மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அண்மையில், மதவடி ஒழுங்கை] (1749)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் [Medical Books] அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் [Latest Computer Books] கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மன்டேலா ரேடர் [புத்தகசாலை] இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்: [1551]

**மூக்குக் கண்ணாடிகள்**

+ 1.00 முதல் +3.50 வரையிலான வெளிநாட்டு மூக்குக் கண்ணாடி வகைகளை (Reading Glass) குறைந்த விலைகளில் பெற்றுக் கொள்ள பென்னி ஹவுஸ், 68, பெரிய கடை, யாழ்ப்பாணம். (C/3557)

**WININN LADIES ACADEMY**

1-9-89 முதல் மனையியல், சங்கீத வகுப்புக்கள் வழமை போல் நடைபெறும்- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (11750)

**தவறிவிட்டது**

பொன்னுத்துரை பூமணி ஆகிய எனது அடையாள அட்டை (476013500 V) தெல்லிப்பழைக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்: (1822)

**கோழிக்குஞ்சுகள் விநியோகம்**

V. M. S; R Hen Farm பிறீமா கைலையின் பிலிமத் இனங்களை உடைய ஒருநாள் புரெய்லர் வெள்ளை கறுப்பு சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் பதிவு செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம், சகலஇறைச்சிக் கோழிகளும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்; பதிவு செய்யும் இடங்கள்: 86 பலாலி றோட், கந்தர் மடம், (இலுப்பையடி) துர்க்காதேவி இன்னிசை இருபாலைச் சந்தி, இருபாலை. (1810)

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 30 ஆம் திகதி புதன் கிழமையும், Hybro புரெய்லர் குஞ்சுகள் 31 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும்; முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1725

**கோழிகக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)**

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் (Cobb) புரெய்லர் குஞ்சுகள் (30. 8. 89) புதன்கிழமை குறைந்தவிலைக்கு விநியோகிக்கப்படும்: முன்கூட்டியே, பதிவு செய்க: இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) குறிப்பு. (எங்கள் குஞ்சுகளுக்கு கூட் தேவை இல்லை, (1740)

**சோதிட, மாந்திரீக நிபுணர்**

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரக தோஷம் முதலா மாந்திரீக விடயங்களுக்கு நாடுங்கள்: 'சக்தி சரவண' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும் மட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (வியாழக் கிழமை விடுமுறை) (1701)

**சேவை**

திருமண சேவைக்கு விவாகப் பொருத்தம் பார்ப்பதற்கு காணி வாங்குவதற்கு விற்பதற்கு எதுவானாலும் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கு. திருவிளங்கம் புதிய மாங்கல்யா மகிரி சர்விஸ் 14, விதானையார் ஒழுங்கை, கொழும்புத்துறை. மேற்கு: (1724)

க; பொ: த. ப (சாத தரப்) பரீட்சை 1989 விடைத்தாள், பரீட்சகர் தொடர்பான விபரங்களை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் விற்பனைக்குக் கிடைக்கும் இடம்; கிளீன் கட், இல: 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்: (1711)


**Spoken English**

Spoken English புதிய பிரிவு ஆரம்பம் 2. 9. 89 சனி, ஞாயிறு மட்டும்: நேரம் 3-4½ p. m. தொடர்பு: S. B. Iyar, 12 வைமன் வீதி, நல்லூர்: (1821)

**கோழிக் குஞ்சு விநியோகம்**

பிறிமா உத்தரவாதம் உடைய ஒருநாள் லோமன் இன புரெய்லர் குஞ்சுகள் ரூபா 15/50, வெள்ளை ரூபா 16/00 பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 13/50, ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. கால் நடை உணவுகளுக்குமெம்மை நாடுங்கள்: ஸ்ரீ கிருஷ்ணா ஒயில் ஸ்ரோர்ஸ் 802, பலாலிவீதி, திருநெல்வேலிச் சந்தி: (1872)


## 9-வது மாத நினைவஞ்சலி



**கணேஷ் சுதா [சிறி]**

(லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபன மின் இணைப்பாளர், காங்கேசன்துறை)

தாயின் மடியில்: 28 04-1963

தமிழ்த் தாய் மடியில்: 28-11-1988

''மாதங்கள் பல சழிந்தாலும் உன் நினைவுகள் எங்களை விட்டு என்றும் அகலா''


உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அப்பா:- மயிலுகணேஷ், அம்மா:- க; சிவபாக்கியம், அண்ணா:- க; செல்வரத்தினம், அக்கா:- க; வசந்தி, தம்பி:- க; ஜசிலன்;

டச்சு றோட், உடுவில்; [சி/3577]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்**



தோற்றம்:- 23. 07. 1901

மறைவு: 30. 07. 1989

**அமரர் க. இ. வேலுப்பிள்ளை**

(மலாயன் பென்சனியர், இளவாலை.)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்:

03-08-1989 இல் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் கலந்து கொண்டும், தந்திகள், கடிதங்கள் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், பல்வேறு விதங்களில் உதவியாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், கீரிமலையில் 29-08-1989 இல்நடைபெறும் அந்தியேட்டியிலும், அன்று பகல் வீட்டில் நடைபெறும் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

இங்ஙனம்:
மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

(1743)

ஓம்

## 'பசுமையான பாச நினைவுகளுடன்'

## பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கார்த்திகேசு வைத்தியலிங்கம்**

(உரிமையாளர் - வைத்தியலிங்கம் மரக்காலை, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 17 - 07 - 1913

மறைவு: 20 - 08 - 1979

அன்புள்ள அப்பா!

''ஆலம் விழுதுகள் போல் உறவு ஆயிரம் வந்துமென்ன-
வேரெனநீயிருந்தாய் அதில் நாம் வீழ்ந்து விடாதிருந்தோம்
எம் கண்ணில் நீர் வடிந்தால் உன் நெஞ்சில் உதிரம் கொட்டிடுமே!!


நீங்கள் வளர்த்த, காட்டிய அதே இலட்சிய பாதையில் அன்றும், இன்றும், என்றும் வாழ்ந்து கொண்டு, நீங்கள் விட்டுச் சென்ற பணிகளை கடமை தவறாது அதே பாதையில் தொடர்ந்தும் நடாத்தி, இன்று நடைபெறும் உங்களது பத்தாவது ஆண்டு திவஷத்தில் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை மெய்யன்புடன் இறைஞ்சி நிற்கும் எங்களை ஆசீர்வதியுங்கள், நல்வழி காட்டுங்கள்.

உங்கள் அன்பு மனைவி, ஆருயிர் செல்வங்கள்,
அன்பு மருமக்கள், அருமைப் பேரப்பிள்ளைகள்.

110, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,
80, B சி அவனியூ, கொள்ளுப்பிட்டி,
4 A, றஞ்சன் வீதி, வெள்ளவத்தை.

(1832)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



வைத்திய கலாநிதி

**சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளை**

தோற்றம்: 11 — 02 — 1916

மறைவு: 29 — 07 — 1989

எம் இதயங்களில் குடி கொண்ட எமது அருமைத் தந்தையே! எங்கு சென்று விட்டீர்கள்! எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு, மீளாத்துயில் கொள்ளச் சென்றீர்களோ! உங்கள் திருமுகம் இனி எப்போது நாம் காண்போம். மரணம் என்பது நிச்சயமானது என்பதை உறுதி செய்தீர்களே; எவர்க்கும் தீங்கு இழைக்க ஒருபோதும் நினைக்காத எம் அன்புத் தந்தையே! இன்று நீங்கள் தெய்வமாகி விட்டீர்கள்! என்றும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது; உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்;

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேர்த்தி,
உற்றார், உறவினர், நண்பர்கள்;

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை; [1751]

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



தாயவளின் சொத்து: 26. 02. 1972

தாயகத்தின் வித்து: 24. 03. 1989

செல்வன்

**சின்னத்துரை கோணேஸ்வரன்**

(றேம்)

(சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன்)

தமிழ் மண்ணுக்கு உடல் ஈந்தவனே!
உன் மறைவு மனித வாழ்வின் முடிவல்ல;
- உன்னை மறக்க முடியாதவர்கள்; -

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
28-08-1989

[1839]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

குறள்:

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

பொருள்:

குற்றம் இல்லாதவனாய்க் குடி உயர்வதற்கான செயல் செய்து வாழ்கிறவனை உலகத்தார் சுற்றமாக விரும்பிச் சூழ்ந்து கொள்வர்.

உதயன்

இல. 192/3, ... வீதி, ... தொலைபேசி: 24809 / 23078
யாழ்ப்பாணம்.
28 - 08 - 1989

## கால்நடைத்துறை வளர்ச்சி

வடக்கு கிழக்கு மாகாணத்தில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, மாகாணக் கால்நடை அபிவிருத்திப் பிரிவு சில புதிய திட்டங்களைத் தீட்டி வருவதாக அறிவிக்கப்படுகிறது: முதற்கட்டமாக கலப்பினப் பசுக்களைப் பெருக்கும் முயற்சி, செயலாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கிலும், கிழக்கிலும் பால் வளம் பெருக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், அந்தத்துறை உரிய முறையில் விருத்தி செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருப்பது குறித்தும், இந்தப் பத்தியில் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

கால்நடை வளர்ப்பு, தமிழ்ப் பிரதேசங்களில் ஒரு வீட்டுக் கைத்தொழிலாகவே இருந்து வருகிறது. அதனை வளர்ச்சி அடையச் செய்யும் பொருட்டு, ஊக்குவிப்பு முறைகள், உதவித் திட்டங்கள் எதுவும் ஒருசீரான, ஒழுங்கான முறையில் இல்லை. சாதாரண மட்டத்திலான வளர்ச்சித் திட்டங்களேனும் நடைமுறையில் பிரபல்யமாகவில்லை.

கால்நடை வளர்த்தலைக் கூட்டுறவு முறையில் அபிவிருத்தி செய்வதற்குத் தானும் உருப்படியான, பயன் பெருக்கவல்ல செயல்முறைகள் மிகக் குறைவு. எனவே அத்தொழிலைப் பரந்துபட்ட பெருந்தொழில் துறையாக வளர்க்கக் கூடிய சாத்தியங்கள் எதுவும் உடனடியாக இல்லை: இந்த நிலைப்பாடு சரிவர உணரப்பட்டாக வேண்டும்.

கால்நடை வளர்ப்பை வீட்டுக்கைத்தொழில் என்ற மட்டத்திலும், கூட்டுறவு முறையிலும் விருத்திகாணச் செய்ய வேண்டும் என்ற இலக்குடன் அமைந்ததான, மேன்மைப்படுத்தும் திட்டங்களே ஆரம்பத்தில், இப்போது தேவை.

வீட்டுக் கைத்தொழில் மட்டத்தில் கால்நடை வளர்க்கும் பண வசதி குறைந்த மக்கள் பலர் தங்கள் நாளாந்த வருமானத்துக்கு அதனை நம்பி இருக்கிறார்கள் என்பதை கணக்கில் எடுக்க மறந்துவிடக்கூடாது. அந்த அம்சத்தைப் பிரதானமாகக் கொண்டே கால்நடை வளர்ப்புக்கான முதற்கட்ட ஊக்குவிப்பு, உதவித் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். பொழுதுபோக்குக்காக, அல்லது மேலதிக வருமானத்துக்காக வீடுகளில் மாடுகள், ஆடுகள் போன்ற கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன என்ற மையக் கருத்துடன் உதவித் திட்டங்களை வகுத்துவிடலாகாது: மேலெழுந்தவாரியாகத் திட்டமிடவும் கூடாது.

வீட்டுக் கைத்தொழில் மட்டத்தில் கால்நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்வதால் உண்டாகக் கூடிய பொருளாதார நன்மைகளைக்கருத்திற் கொண்டு அதற்கான வளர்ச்சித் திட்டங்களை வகுக்க வேண்டும். அது மட்டுமன்றி, அவை வெறும் காகிதத் திட்டங்களாக இல்லாமல், கிராமத்து அடிமட்ட மக்களின் கைக்கு எட்டக்கூடியவையாக உருவாக்கப்பட வேண்டும்:

இரண்டாம் கட்டத்தில், கால்நடை வளர்ப்பை கூட்டுறவுத் தொழிலாக வளர்க்க வகை செய்யலாம். கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய விவசாயப் பிரதேசங்களில் கால்நடைகளை பெரும் பண்ணைகளாக நடத்துவதன் மூலம் அத்துறையில் வளர்ச்சி காணமுடியும்; விருத்தி அடையவும் இயலும்.

ஆரம்பத்தில் அரசாங்கம் கால்நடைப் பண்ணைகளைத் தானே ஆரம்பித்து, நவீன உத்திகளைக் கையாண்டு முன்மாதிரியாக, முன்னோடியாக விளங்கலாம். அதனைப் பார்த்துத் தனியாரும் கூட்டுறவு ரீதியில் அத்துறையில் மூலதனமிட முன்வருவர். அத்தகையோருக்கு உதவிகளையும், ஊக்குவிப்புகளையும் வழங்கி உற்சாகப்படுத்தலாம். கால்நடைப் பண்ணைகள் பெருக அதுவே வழி.

வடக்கு-கிழக்கில் முன்சொன்ன இரண்டு கட்டங்களாக, கால்நடை வளர்ப்பை விருத்தி செய்தால் வெளிநாட்டுப் பால்மாவுக்காகத் தமிழர் செலவிடும் பணம் மிச்சமாகும். பலருக்குத் தொழில் வாய்ப்புக் கிடைக்கும். பால் வளமும் பெருகும். சத்துணவான பாலைக் குறைந்த விலையில் வசதி குறைந்த குடும்பங்களும் வாங்கிப் பருக வழி பிறக்கும்.

எதையும் எமது சூழலுக்கு ஏற்ப, திட்டமிட்டுச் செயற்படுத்தினால் பலன் கிடைக்காமற் போகாது: மக்கள் நலனை நாடி வகுக்கப்படும் திட்டங்களே வெற்றியளிக்கும். பிரதேசம் வளம் காண அந்த வகைச் செயல் திட்டங்கள் பலதுறைகளிலும் அவசியம்.

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

கருணை செழிந்த நின்னுருவக்
கண்ணுற் காணே ஞானுளன்
காதல் விஞ்சக் கண்களுமே
களிக்க வெந்தன் மொழிகுளறக்

கருது முடலம் புளகமுறக்
கரமே கூப்பி நிற்கின்றேன்
கலையே நிறைந்த புஜவவுலைக்
காணும் பருவம் பெறுவேனோ!

திருவே! நல்லூர்ப் பதி விளைந்த
தேனே கனியே தெள்ளமுதே
சிந்தை கூர மயின் மிசையிற்
சிறந்தே யிருக்கும் தேசிகனே!

- செ. அரியகுணசிங்கம்

[இன்று நல்லூரில் 23 ஆம் திருவிழா]

### விமானப்படை தேடுதல்!

கொழும்பு, ஆக. 28

கொட்டுகொட என்னும் இடத்தில் விமானப்படைப் பிரிவு ஒன்றின் மீது வெள்ளிக்கிழமை நள்ளிரவு அளவில் இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதைத் தொடர்ந்து விமானப்படை வீரர்கள் அந்தப் பகுதியில் பெரிய அளவில் தேடுதல் நடத்தினர்.

### குவிந்து கிடந்த எரிந்த சடலங்கள்

கொழும்பு, ஆகஸ்ட் 28

கண்டியிலுள்ள மிரிஸ்ஸல்ல என்னும் இடத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும் அரை குறையாக எரிந்த பதினைந்து சடலங்கள் குவிந்து கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

அனுராதபுரம், தொச்சியாகம எனுமிடத்தில் காட்டினுள் ஓர் ஆணின் சடலமும் ஒரு பெண்ணின் சடலமும் கண்டுபிடிக்கப்பட்டன.

இறந்தவர்கள் கணவன் மனைவி என்று சொல்லப்பட்டது. அதே இடத்தில் வேறு இரு இளைஞர்களின் சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

### சுட்டுக்கொலை

அச்சுவேலி ஆகஸ்ட் 28

இராசவீதி தோப்பு அரசடியில் இளைஞர் ஒருவர் 25ஆம் திகதியன்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் ஆவரங்கால் சர்வோதயா வீதியைச் சேர்ந்த க. இந்திரன் (வயது 23) என்பவராவார். (ஓ-11)

# வவுனியா விவசாயக் கல்லூரியில் ஆராய்ச்சிகளும் இடம் பெறும்

யாழ்ப்பாணம், ஆக 28

வவுனியாவில் எதிர்வரும் செப்ரம்பர் மாதம்முதல் இயங்கவிருக்கும் விவசாயக் கல்லூரி வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஏற்படும் விவசாயப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ச்சிகளையும் மேற்கொள்ளவிருக்கிறது.

இதுவரைகாலமும் குண்டசாலையில் மட்டும் இயங்கி வரும் விவசாய டிப்புளோமா பயிற்சிக் கல்லூரியில் தமிழ் மாணவர்கள் பயிலுவதிலிருந்துவந்த சிரமங்கள் இக்கல்லூரி அமைவதன்மூலம் தீர்க்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

விவசாயப் பிரதேசமான வவுனியாவில் அமையும் இக்கல்லூரியில் இருவருட பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் ஏற்படும் விவசாயத்துறை வெற்றிடங்களில் இவர்களுக்கு முன்னுரிமையும் அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது:

விவசாய வளர்ச்சியை மட்டும் அல்லாமல் வன அபிவிருத்தி நன்னீர் மீன்வளர்ப்புப் போன்ற பாடவிதானங்களும் இப்பயிற்சி நெறியில் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் விவசாயம், கால்நடை உற்பத்தி, வன விருத்தி, காணி அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனம் போன்ற துறைகளில் நடுத்தர தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை உருவாக்கவும் இக்கல்லூரி துணைபுரியும்.

அத்துடன் விவசாய விலங்கு வேளாண்மை குறித்துப் பொதுமக்களுக்கு விஞ்ஞான ரீதியில் பயிற்சியும் அளிக்கப்படவிருக்கிறது:

இக்கல்லூரியின் விரிவுரையாளர்கள் விவசாயப் பிரச்சினைகள் குறித்த ஆராய்ச்சி நடாத்தவும் இந்த ஆராய்ச்சிகளில் மாணவர்களை உள்ளடக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது:

இக்கல்லூரியை அமைக்க வடக்கு கிழக்கு காணி விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது: (இ-3)

## விதைஉருளைக்கிழங்குவழங்க அந்தருக்கு ரூ.150 முற்பணம்

அச்சுவேலி ஆக 28

விதைஉருளைக்கிழங்குவழங்குவதற்கு விவசாயிகளிடம் இருந்து அந்தர் ஒன்றுக்கு 150 ரூபாப்படி முற்பணம் பெறப்படுகின்றது:

புத்தூர் கமநல சேவை நிலையம் தமது பகுதியில் உள்ள விவசாயிகளிடம் இருந்து விதை உருளைக்கிழங்கிற்கு அந்தருக்கு 150ரூபாப்படி முற்பணம் பெற்றுக்கொள்கின்றது.

இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் விவசாயிகள் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குக்கான முற்பணத்தைச்செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-11)

## நல்லூர் உற்சவத்தை ஒட்டிய சமய பண்ணிசைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் ஆக 28

நல்லூர்கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி யாழ். மாநகரசபையால் நடத்தப்பட்ட சமய அறிவு, பண்ணிசைப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கத்தால் 31ஆம் திகதி பூங்காவனத்திருவிழா வன்று உற்சவகாலமாநகரசபை அலுவலகத்தில் பகல் இரண்டு மணிக்குவழங்கப்படவிருக்கின்றன.

வெற்றியீட்டியோர் விவரம் வருமாறு:

**சமய அறிவுப்போட்டி**

கீழ்ப்பிரிவு: செல்வி ச. சஜிதா, செல்வன் ச. கௌரிசங்கர், செல்வி வி. நிவேதிகா செல்வி யோ. கலாரூபி, செல்வி பா. பாலஜெயந்தி.

மத்தியபிரிவு: செல்வி த. ஆரணி, செல்வி த. தயாளினி செல்வி பா. சர்மிளா, செல்வி நசோபனு, செல்வன் மு சதீஷ் பாலமுருகன்:

மேற்பிரிவு: செல்வி ஜி சிவதர்சினி, செல்வி சோ. நாளயினி, செல்வி சி. சிவரதி, செல்வன் கு. சரச்சந்திரா, செல்வி சி. நிஜானந்தி.

அதிமேற்பிரிவு: செல்வி இ. ஜெயரஞ்சினி, செல்வி கு. சித்திரா, செல்வி வ. வரதகௌரி செல்வி தி. தர்சினி, செல்வி இ. யஜோதினி.

**பண்ணிசைப் போட்டி**

கீழ்ப்பிரிவு: செல்வி சிவரதி சிவபாலன், செல்வி கவிதா, செல்வராசா, செல்விநளாயினி சோமசுந்தரம்:

மத்தியபிரிவு: செல்வி பிரிசாந்தி, இராமச்சந்திரன், செல்வி நீதிமதிகுமாரசுந்தரம் செல்வி சாந்தி கனகரத்தினம்

மேற்பிரிவு: செல்வி மி. யசோதா, செல்வி கு. கேமாவதி செல்வன் தி. கருணாகரன் [க-3]

### வீதி விஸ்தரிப்பு

கொக்குவில் ஆக. 28

யாழ். பல்கலைக்கழக வைத்திய பீடத்துக்கு முன்பாக உள்ள வீதி விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. (இ 69

### கிளிநொச்சியில் புதிய முகாம்கள்

யாழ்ப்பாணம், ஆக 28

கிளிநொச்சிநகரப்பகுதியில் பல புதிய முகாம்கள் கண்டி வீதியில் அமைக்கப்பட்டுள்ளன.

பரந்தனில் இருந்து 55ஆம் கட்டை வரை முகாம்கள் தொடர்ச்சியாக காணப்படுகின்றன:

இவற்றின் முன்னால் வீதித் தடைகள் போடப்பட்டு சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (க-76)

### விஞ்ஞான முரசு வெளியீடும் சொற்பொழிவும்

யாழ்ப்காணம் 28

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் விஞ்ஞான முரசு இதழ் 4 வெளியீட்டு விழாவும் விஞ்ஞான சிறப்புச் சொற்பொழிவும்இன்றுதிங்கட்கிழமைஐந்து மணிக்குஇச்சங்கத்தின் கொழும்பு மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

கிழக்கிலங்கை பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கே. அருட்பிரகாசம் "மனிதனும் உலகச்சுற்றுடலும்" என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (க-3)

### கல்முனை - கொழும்பு புதிய பஸ் சேவை

அம்பாறை ஆக 28

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச்சபையின் கல்முனை டிப்போ கொழும்பிற்கான புதிய பஸ்சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது:

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு கதுறு வெலவழியாக இந்த பஸ்சேவை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [க-14]

### சமய சந்நிதியில்

#### நாஞட்டான் அம்மன் கோவில் மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஆக. 28

நாஞட்டான் செல்வ முத்து மாரியம்மன் கோயிலின் மஹோற்சவம் அடுத்த மாதம் 6ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறும். (க)

#### மகா கும்பாபிஷேகம்

அச்சுவேலி, ஆக. 28

சிறுப்பிட்டி வடக்கு ஞானவைரவர் ஆலயத்தில் அமைக்கப்பட்ட பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் செப்டம்பர் மாதம் 3ஆம் திகதி நடைபெறும்: மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்: (க-11)

#### புத்தூர் சிவன் கோயில் கும்பாபிஷேகம்

அச்சுவேலி, ஆக. 28

புத்தூர் மேற்கு சிவன் கோயில் மகா கும்பாபிஷேகம் செப்டம்பர் மாதம் 3ஆம் திகதி நடைபெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (க-11)

## அம்பாறை-வடபகுதிபிரயாணத்தில் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள்

அம்பாறை, ஆக 28

அம்பாறை மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணம், மற்றும் பகுதிகளுக்கு (வடபகுதி) வருகை தரவேண்டிய பொது மக்கள் பிரயாண வசதியின்றிப் பெருங்கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக கல்முனையிலிருந்து வடபகுதிக்கான போக்குவரத்துவசதிகள் எதுவும் இன்மையால் இந்த மாவட்டத்தில் தொழில்புரியும் வடபகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் ஏனைய பொதுமக்களும் இங்கு வந்து சேர்வதற்குப் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்:

இந்த மாவட்டத்திலுள்ளவர்கள் யாழ்ப்பாணத்திற்கான பஸ்ஸைப் பிடிப்பதற்கு ஒருநாளைக்குமுன்பாகவே மட்டக்களப்பிற்கு வந்து தங்க வேண்டிய நிலைமையும் நீடித்து வருகின்றது:

ஆனால் மட்டக்களப்பிலிருந்து ஒரேயொரு பஸ்மட்டுமே யாழ்ப்பாணம் புறப்படுவதாலும் தனியார்பஸ்கள் சேவையில் ஈடுபடாததாலும் பிரயாணிகள் பெரும் நெரிசலுடன் பிரயாணம் செய்யவேண்டியுள்ளது.

கிழக்குப் பிராந்தியப் போக்குவரத்துச்சபையின் கல்முனை டிப்போ யாழ்ப்பாணத்திற்கான பஸ்சேவையை நடத்திவந்தது: பின்னர் அது நிறுத்தப்பட்டுவிட்டது:

தனியார் பஸ்களும் தற்பொழுது சேவையிலீடுபடாதிருப்பதால் பொதுமக்கள் நலன்கருதி கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் கல்முனை டிப்போவும் யாழ்ப்பாணம் டிப்போவும் கல்முனைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே உடனடியாக பஸ் சேவைகளை ஆரம்பித்து நடத்த முன்வரவேண்டும் என மக்கள் கோருகின்றனர். (க-14)

### குருநாகலுக்கு ரஞ்சன் விஜயம்

பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின சனியன்றுகுருநாகல், கம்பஹா மாவட்டங்களுக்கு விஜயம் செய்தார்.

குருநாகலில் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை அவர் பார்வையிட்டார்: அத்துடன் பாதுகாப்பு சம்பந்தமாக இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனைகளையும் நடத்தினார்:

கம்பஹா மாவட்டத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டார். (ஓ-ரி)

## 5 ஊர்காவல் நிலையங்கள் ஒரே நேரத்தில் முற்றுகை
### துப்பாக்கிகள், சீருடைகள் அபகரிப்பு

கொழும்பு, ஆக. 28

ஹொரவப்பொத்தானைப் பகுதியில் உள்ள ஐந்து ஊர்காவல் படை நிலையங்களை தீவிரவாத சந்தேக நபர்கள் கடந்த வியாழக்கிழமை முற்றுகையிட்டனர்.

இராணுவ ... சென்ற அவர்கள் அங்கிருந்து 29 துப்பாக்கிகளையும் 250 சுற்று ரவைகளையும் அபகரித்துச் சென்றனர்.

ஊர்காவல் படையினரின் சீருடைகளையும் சந்தேக நபர்கள் பறித்துச் சென்றனர்.

ஐந்து நிலையங்கள் மீதான முற்றுகையும் ஒரே சமயத்தில் ... சிரேஷ்ட பொலீஸ் அதிபர் ஒருவர் தெரிவித்தார். (ஓ-ரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமுகம்

#### உயர்கல்வி வசதி

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயம் நகரின் மத்தியில் அமைந்துள்ளது: இப்பாடசாலையில் 5 பட்டதாரி ஆசிரியர்கள் உள்ளனர். போதிய இடவசதி உண்டு. கடந்த சில ஆண்டுகளாக க. பொ. த (சாதாரண) பரீட்சையில் இவ்வித்தியாலயம் கிளிநொச்சி மாவட்டத்திலேயே கணிக்கத்தக்க பெறுபேறுகளைப் பெற்றது.

இவ்வித்தியாலயத்தின் மாணவர்கள் தாங்கள் இப்பாடசாலையிலேயே உயர்கல்வியையும் கற்கப் போவதாகக் கோரி நின்றும் கொத்தணி எனும் அமைப்பைச் சுட்டிக்காட்டி அதிகாரிகள் இதை மறுத்து வருதுள்ளனர். இதனால் இப்பாடசாலையில் உயர்தரத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையானமாணவர்களிலும் மேலதிகமான மாணவர்கள் இருந்தபோதும் இவர்கள் இப்பாடசாலையை விட்டு வெளியேறி வேறு பாடசாலைகளுக்கு அலைய வேண்டியுள்ளது.

எமது மாணவர்களுக்கு இப்பாடசாலையிலேயே உயர்கல்வி (வர்த்தகம், கலையாவது) கற்க அனுமதி வழங்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பெற்றோர்கள்
கிளிநொச்சி

#### ஆடியபாத வீதி

நல்லூர் ஆடியபாத வீதியில் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த கல்வியங்காட்டு சந்தையையும், சனத்தொகை மிக்க நாயன்மார்கட்டையும் இணைக்கின்ற சுமார் 300யார் நீளமான இப்பகுதி கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக எதுவித திருத்த வேலைகளும் செய்யப்படாமல் இருக்கின்றது. அரியாலையை, பருத்தித்துறை வீதியுடனும், பலாலி வீதியுடனும் இணைக்கின்ற முக்கிய வீதியாக இது இருக்கின்றபோதிலும் இதன் திருத்த வேலைகள் இன்னும் நடைபெறவில்லை. தினமும் இங்கு நடக்கும் விபத்துக்களும், வீட்டு மதில்களை முட்டி நிற்கும் வாகனங்களும் இவ்வீதியின் அவலநிலையை நன்கு புலப்படுத்தும்.

இதுபற்றி பலதடவைகள் உரியவர்களிடம் முறையிடு செய்தும் இதுவரை பலன் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் "இவ்வீதி தனக்கு உரியதல்ல; மாநகர சபைக்கே உரியது" என்று பெருந்தெருக்கள் திணைக்களமும் இப்பாதை தனக்கு உரியதல்ல என்று மாநகர சபையும் தெரிவித்துள்ளதாகும்.

எனவே இவ்வீதியைத் திருத்த இதற்குப் பொறுப்பானவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பொது மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

ராஜா ராஜதுரை
நல்லூர்.

### கண்டதும் கேட்டதும்

இப்போது காட்டுப் பகுதிகளுக்குத் தேன் எடுக்கச் செல்பவர்களும், வேட்டையாடச் செல்பவர்களும் வெகுவாகக் குறைந்து விட்டனர்: ஆயினும் பெரும் அளவு தேன் வவுனியாவில் விற்கப்படுகிறது.

தேனில் இரண்டு வகைகள் உண்டாம்! ஒன்று கோயில் தேன், மற்றது சுத்தமானதேன்:

கோயில் தேன் என்பது சீனியில் தயாரிக்கப்படுவது: கோயில் திருவிழாக்களுக்கு உபயோகிப்பது.

சுத்தமான தேன் எடுக்கலாம் என எண்ணிப் பலரும் வவுனியா வருகிறார்கள். கோயில் தேனையே பெரும்பாலும் அவர்கள் வாங்கிச் செல்கிறார்கள்;

தேன் வியாபாரம் -எப்படி?

- செய்தி லோலன்

## நூறுவது நாள் நினைவஞ்சலி



திரு. கணபதிப்பிள்ளை - கதிர்காமராசா
[சங்கிலியன்]

தோற்றம்: 17 - 08 - 1962
மறைவு: 20 - 05 1989

வீர திரு மகனே! விண்ணுலகம் சென்றாயோ?
தாயாரும் தந்தையும் நாம தளர்ந்தே அழுகின்றோம்
உன்றன் உடன்பிறந்தோர் ஓலம் இடுகின்றார்
உற்றாரும் ஊரவரும் ஒப்பாரி கொள்கின்றார்
நற்றாயாம் எங்கள் ஈழத்திரு நாட்டை
ஒப்பாரும் இல்லாமல் ஓங்கிடவே செய்வதற்கு
சபதம் எடுத்திட்டாய் தளராதுழைத்திட்டாய்
எத்தனை ஆண்டுகள் இதற்காக ஏங்கினையோ?
நாள்கள் நூறு சென்றாலும் நாம்மறவோம் உன்தனையே
தோள்கொடுத்தாய் தோழர்க்கு சுந்தரனே
சாந்தி என்றும் அடைந்திடவே இறைஞ்சுகின்றோம்
இறைவனை நாம்.

உன் பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதரர், உற்றார்:

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

(1745)

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



எம் இதயக்கோயிலின் தங்க விக்கிரம்
செல்வி
கிருஷ்ணவேணி கதிர்காமத்தம்பி
(கல்வாரணி)

மலர்வு: 22. 01. 1960
உதிர்வு: 14. 07. 1989

அன்பு மகளாய் பாசமிகு சகோதரியாய் எம் இல்லத்தில் சுடர் விட்ட ஜோதியே! மணக்கோலத்தில் காண இருந்த உன்னைத் திக்கு இரையாக்கி பிணக்கோலத்தில் காணவைத்தானும் இறைவன்தானோ? உனது மரணம் விதி என்ற பெயரில் காலம் செய்த சதியா? விடை காண இயலாது தவிக்கின்றன எம் இதயங்கள் நீ மீளாதுயில் கொண்டு விட்டாய், ஆனால் எம்மால் துயில் கொள்ள இயலவில்லை. உனது திடீர் மறைவு எம் இதயங்களில் ஏற்படுத்திவிட்ட காயம் என்றுமே ஆறாது. பாவிகள் நாம் நீ எம்முடன் வாழ்கிறாய் என்ற மனத் தேற்றத்துடன் உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்;

என்றென்றும் உனது மறைவை மறக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும்!

அம்மா, அண்ணன்மார்,
தம்பி, மற்றும் உறவினர்;

அல்வாய் தெற்கு,
முடக்காடு.

(1734)

# கிளிநொச்சி மழை இன்றி

# பெருமளவில் பாதிப்பு

## தொழிலாளர் வேலையின்றிக் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஆக 28
கிளிநொச்சி மாவட்டம் மழைவீழ்ச்சி இல்லாததால் மிகவும் பாதிப்படைந்துள்ளது.

இந்தமுறை மழை இல்லாததால் சிறுபோக விவசாயம் மேற்கொள்ளப்படவில்லை; வயல்நிலங்கள் யாவும் தரிசாகக் காட்சிதருகின்றன; கூலியாட்கள் வேலையின்றிக் கஷ்டப்படுகிறார்கள்.

குளங்கள் யாவும் முற்றாக வற்றிவிட்டதால் கால்நடைகள் தண்ணீரின்றி அலைகின்றன:

வீடுகளிலுள்ள கிணற்றுத் தண்ணீரும் வற்றிவிட்டதால மக்கள் பாவனைக்காக தண்ணீர் பெறுவதில் பல இன்னல்களை அனுபவிக்கிறார்கள்;

இதேவேளை குழாய்க்கிணறுகள்மூலம் தண்ணீர் பெற்றவர்கள் தற்போது மின்சாரம் இல்லாததால் அதனையும் பெற முடியாது உள்ளனர்.

காலபோக பயிர்ச்செய்கையும் பாதிக்கப்படலாமென மக்கள் அஞ்சுகிறார்கள். (இ-76)

## சத்துணவு

சாவகச்சேரி, ஆக 28
கைதடி சரஸ்வதி அறவழிப் பாலர் பாடசாலையில் கல்வி பயிலும் சிறுவர்களுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பள்ளியில் பயிலும் பாலர்களின் பெற்றோர்கள் ஆரம்பத்தில் சத்துணவு வழங்கி வந்தார்கள்; பின்னர் இக் கிராமத்தில் உள்ளவர்கள் தாமாகவே முன்வந்து ஒவ்வொருநாளும் ஒவ்வொருவர் சத்துணவு வழங்கிவருகின்றனர்.

பாடசாலை அபிவிருத்திச் சபையின் தலைவர் ஆசிரியர் பா. செல்வத்துரை மக்களின் இந்த முன்மாதிரிக்குப்பாராட்டுத் தெரிவித்துள்ளார்; [க-31]

## அனுராதபுரத்தில் முப்பத்தைந்து சடலங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 28
அனுராதபுரம் பகுதியில் குஞ்சுக்குளம் என்ற இடத்தில் 35 கிராமவாசிகளின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது:

பிரஸ்தாப பகுதியில் இலங்கை இராணுவச் சிப்பாய் ஒருவரின் குடும்பத்தை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றதாகவும் அதற்குப் பழி வாங்கும் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே உள்ளூர் வாசிகள் கொல்லப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. ஆனால் அது ஊர்ஜிதப் படுத்தப்படவில்லை:

இந்தக் கொலைகள் பற்றி இராணுவமும், பொலீஸும் மறுப்புத் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தீவிரவாதிகளால் கொல்லப்படும் ஒவ்வொரு படையினரின் குடும்பத்திற்கும் பழி வாங்கலாக, தாம் தீவிரவாதிகளின் 12 ஆதரவாளர்களின் குடும்பங்களை கொல்லப்போவதாக எச்சரிக்கை விடும் சுவரொட்டிகள் தெற்கின் பல பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக ஒட்டப்பட்டு வந்தது தெரிந்ததே. (அ-9)

---

கமநலசேவைகள் திணைக்களம்
முல்லைத்தீவு

## கேள்வி அறிவித்தல்

ஒட்டுசுட்டான், துணுக்காய் கமநலசேவை நிலையங்களில் பாவிக்கப்பட்ட இரண்டு உழவு இயந்திரங்களும், அவற்றிற்குரிய பெட்டிகளும், கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. கேள்வி விண்ணப்பங்கள் 07-09-89ஆம் திகதிக்கு முன்னர் இத்திணைக்களத்திற்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'பாவிக்கப்பட்ட உழவு இயந்திரங்கள் பெட்டிகளுக்கான கேள்விகள்' என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

கேள்வி விண்ணப்பப்படிவங்கள் மீளப்பெறமுடியாத பணமாக ரூபா 25/- செலுத்திப்பெற்றுக் கொள்ளலாம். உழவு இயந்திரங்களையும் பெட்டிகளையும் பொது விடுமுறை நாட்கள், ஞாயிற்றுக்கிழமை, தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00மணி வரை அந்நிலையங்களில் பார்வையிடலாம்;

செ. பஞ்சலிங்கம்
கமநலசேவைகள் உதவி ஆணையாளர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

கமநல சேவைகள் அலுவலகம்,
31, லக்கி வீதி,
முல்லைத்தீவு
22-08-1989

[சி-3556]

---

மக்கள் முகம்

## முஸ்லிம் கல்விமாநாடு மாவட்டக்கிளை

அம்பாறை, ஆக 28
அகில இலங்கை முஸ்லிம் கல்விமாநாட்டின் மாவட்டக் கிளையொன்று அம்பாறை மாவட்டத்தில் கடந்தவாரம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

முஸ்லிம் கல்விமாநாட்டின் நிருவாகப் பரவலாக்கல் திட்டத்தின்கீழ் மாவட்ட ரீதியில் அமைக்கப்பட்ட முதலாவது கிளை இதுவாகும்.

கிளையின் தவிசாளராக கிழக்குப் பல்கலைக்கழகப் பீடாதிபதி ஜனாப். எம். வை. எம். சித்தீக்கும், தலைவராக அக்கரைப்பற்றுக் கோட்டக்கல்வி அதிகாரி ஜனாப் ரீ. இபுறாலெவ்வையும், செயலாளராக கொக்தணி அதிபர் ஜனாப். எம் சீ ஆதம்பாவாவும் தெரிவு செய்யப்பட்டனர் (க-14)

## கூ. ச. கிளை நிர்வாகிகள்

மானிப்பாய், ஆக 28
மானிப்பாய் கோவில்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகள் இருபத்தொன்றுக்குமான தேர்தல் மனுக்கள் கடந்தவாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டபோது அநேகமான கிளைகளில் போட்டியின்றி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கிளை 11 ல் பின்வருவோர் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர்கள்: இ. வல்லிபுரம், த. சிவரத்தினம். பா. சபாரத்தினம், நா. சிவப்பிரகாசம். க. சந்திரராசா, அ. ஐயம்பிள்ளை, சி. முத்துலிங்கம், டபிள்யூ. ஜி. அன்னப்பா, நாகமுத்து சிவராசா;

ஐந்து ஆண்டுகளின் பின்னர் கிளைச்சங்கங்களுக்கான உத்தியோகத்தர் தெரிவு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது;

---

## ஓராண்டு நினைவஞ்சலி



கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
(மணியம், பிரபல வர்த்தகர்)

மலர்வு: 28 - 04 - 1942
உதிர்வு: 08 - 09 - 1988

ஓராண்டு கழிந்தாலும், அகிலமே அழிந்திடினும்
நூற்றாண்டு சென்றாலும் மாறாது எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்திபெற எமது கண்ணீர்ப்
பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்;

இவரின் பிரிவால் வாடும்:
சகோதரர்கள்:

மானிப்பாய்.

(1817)

---

## காவலாளரும் தோட்ட வேலையாளும் தேவை

யாழ் பிராந்தியத்தில் ஓர் சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு பொறுப்பு வாய்ந்த ஓர் காவலாளியும், தோட்ட வேலையாளரும் தேவை; வயது 45க்கும் 55க்கும் உட்பட்டவராகவும், தேகாரோக்கியமும்: நல்நடத்தையும் உடையவராகவுமிருக்க வேண்டும்: தெரிவு செய்யப்படுபவர் நிலையத்தில் தங்கியிருக்க வேண்டும். சம்பளம்நேரில் பேசி முடிவு செய்யலாம்.

15 - 09- 89க்குமுன் தகைமைச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்:

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-

தலைவர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(C/3249)

---

## வெளிநாட்டுப் பயணம்

### உடனடிப் பிரயாணம்

● கிறீக் கப்பல்கள் 2

| | | |
|---|---|---|
| B | 3+3 | வெற்றிடங்கள் |
| OILER | 3+3 | " |
| FRESHER | 5+5 | " |

முதலில் விண்ணப்பித்தவர்களும PASS PORT & WAGES PAPER அல்லது C.D.C + 4 படங்களுடன் நேரில் வரவும்.

● LIBYA (லிபியா)

25 வயதிற்குமேல்
Labourer — 10 ஆட்கள்
சம்பளம் 13,000 00
Passport + 6 படங்கள்

● சிங்கப்பூர் (SINGAPORE)

தாதிமார் (Nurse)

27 ஆம் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் நேரில் சந்திக்கவும்
★ PASSPORT & BOND உடன் செய்து கொடுக்கப்படும்:

க. இந்திரலிங்கம்

**நிரோஷன் என்ரபிறைசஸ்**

பருத்தித்துறை வீதி, மயிலிட்டி.
காங்கேசன்துறை.
(T.B. வைத்தியசாலை அருகில்)

(1703)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 20-04-1969

மறைவு: 15-07-1989



நடராசா வசந்தகுமார்

நிமிர்ந்தவொரு நெடுமரமாய்
நிழலளிப்பான் என்றிருந்தோம்
இலங்கன்று ஒடிந்ததையா நாங்கள் நிழல் அற்றோம்
வளர்ந்தவர்கள் அறுபதுக்கு விழாக்கண்டு கலகலக்க
இளந்தளிர்கள் வீழ்வதெல்லாம்
எமதினத்தின் விதியாமோ?
நிழலற்றோம் எனினும் எம் நெஞ்சக்கினியவனே
இறையவனின் இனிய நிழல் என்றும் உனக்காகுக.

எமது மைந்தனோடு ஒன்றாக மரணித்தார் தம்பிராசா திருச்செல்வம் (காரைநகர்), குமாரசாமி சுவாருபன் (கிளிநொச்சி), இருவர்க்கும் எமதினிய அஞ்சலிகள் உரித்தாகுக.

எமது மைந்தனின் பூத உடலைத் தருவிக்கும் பணியில் உதவியவர்கள் நோர்வே ஆதவன், ரத்வசிங்கம் குடும்பத்தினர். மற்றும் நண்பர்களுக்கு கட்டுநாயக்கா விமானநிலைய சுங்கக் கட்டுப்பாட்டு அதிகாரிகளான எஸ். சுந்தரலிங்கம், விக்னேஸ்வரன், சக அதிகாரிகளுக்கும் கொழும்பில் எமக்கு பல உதவிகளையும் அனுதாபங்களையும் தந்தவர்க்கும் புங்குடுதீவில் நிகழ்ந்த மரணக்கிரியை மற்றும் வைபவங்களில் கலந்து அனுதாபித்து உதவி பல புரிந்த நண்பர், அயலவர் உறவினர் அனைவர்க்கும் எமது நன்றிகள்:

தந்தை ஏ. நடராசாவும் தாயாரும்,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்மார்,
சிறியதந்தையினர், சித்திமார்,
மாமன் மாமிமார், மற்றும்
உறவினர்கள்.

1ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு:

(1748)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களின் உள்ளாடைகளைத் திருடிய பிரிட்டிஷ் எம்.பி

லண்டன் ஆக 27

நகைகள் மற்றும் பெண்களின் உள்ளாடைகளைக் களவாடியதாக பிரிட்டிஷ் எம்பி ரொன் பிரவுன் என்பவர் மீதுலண்டன் நீதிமன்றத்தில்வழக்குத்தொடரப்பட்டுள்ளது:

49 வயதான இந்த எம்பி தொழிற் கட்சி உறுப்பினர் ஆவார்.

தென் இங்கிலாந்தில் உள்ள ஹேஸ்டிங் நீதிமன்றத்தில் இவ் வழக்கு விசாரணைக்கு வந்த போது திரு: பிரௌன் தான் குற்றவாளி அல்ல என்று தெரிவித்தார்

நாடாளுமன்றத்தில் உதவியாளராகப் பணிபுரிந்த நோன்ஞ லொங்டென் என்ற பெண்ணுக்குச் சொந்தமான நகைகளையும் உள்ளாடைகளையும் களவெடுத்ததாக திரு. பிரவுன் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது: [எ]

● அமைச்சர் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள

# எதிரணித்தலைவர் வி.பி.சிங்குக்குகொலைமிரட்டல்; பாதுகாப்பு வழங்க ராஜீவ் அவசர உத்தரவு!

புதுடில்லி, ஆக 27

எதிர்க்கட்சிகள் அங்கம் வகிக்கும் தேசிய முன்னணியின் தலைவர் திரு: வி. பி. சிங்கிற்கு பூரண பாதுகாப்பு வழங்கும்படி பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று உத்தரவிட்டார்;

தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகக் கூறி பிரதமருக்கு திரு: வி.பி. சிங் கடிதம் எழுதியிருப்பதைத் தொடர்ந்தே, பிரதமர் திட்டவட்டமான உத்தரவு ஒன்றை உள்துறை அமைச்சருக்குப் பிறப்பித்தார்:

நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் திரு. வி. பி. சிங்கிற்கு அந்தந்த மாநில அரசுகள் தேவையன பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று உள்துறை அமைச்சர் பூட்டாசிங் சகல முதலமைச்சர்களையும் பணித்திருக்கிறார்.

திரு: சிங்குக்கு அமைச்சர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்றும் பிரதமர் பணித்திருக்கிறார்.

இதனிடையில் — திரு: சிங்குக்குப் பாதுகாப்பு வழங்குவது சம்பந்தமான ஏற்பாடுகளை உள்துறை அமைச்சர் பூட்டாசிங் தானே நேரில் மேற்பார்வை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது;

ஆதேவேளை — கரிபியன் தீவு ஒன்றில் உள்ள வங்கியில் வி பி. சிங் பெயரில் ரண்டு கோடி டாலர் பணம் ரகசியமாக வைப்புச் செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியிட்ட அரபு டைம்ஸ், காலீஜ் டைம்ஸ் ஆகிய பத்திரிகைகள் மீது வழக்குத் தொடரப் போவதாக திரு: வி. பி. சிங் அறிவித்திருக்கிறார். (எ)

### அங்கீகாரம்

மாஸ்கோ, ஆக 27

போலந்தில் கடந்தவாரம் அமைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அல்லாத சொலிடாரிட்டிக் கட்சித் தலைமையிலான அரசுக்கு சோவியத் சேஜி பி ஸ்தாபனம் அங்கீகாரமளித்தது. (எ)

### நிராகரிப்பு

அருணாசலப் பிரதேசத்தில் போடோ இனப் போராளிகளுக்கு புகலிடம் அளிக்கப்பட்டிருப்பதாக அஸாம் மாநில அரசு தெரிவித்த குற்றச்சாட்டை அருணாசலப் பிரதேசமுதலமைச்சர் கேகொங் அப்பங்நிராகரித்து விட்டார்;

## ஓஸோன் படல பாதிப்பை திருத்த ஏவுகணைகளை அனுப்ப ஆலோசனை

எரிஸ் (சிசிலி). ஆக: 27

பூமியைக் காப்பாற்றும் ஓஸோன் படலத்தில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பழுது பார்க்க, ஆயுத பரிகரண உடன்பாட்டின் கீழ் உருக்குலைக்கப்படவுள்ள ஏவுகணைகளை பயன்படுத்த வேண்டும் என்று சோவியத் பௌதிகவியல் விஞ்ஞானி அன்தோனியோ சிச்சிச்சி என்பவர் ஆலோசனை கூறியிருக்கிறார்: ஓஸோன் படலத்தை அழிக்கும் குளோரோ புளோரோ கார்பனை இல்லாமற் செய்யக் கூடிய இரசாயனப் பொருள்களை இந்த ஏவுகணைகள் மூலம் வளி மண்டலத்திற்கு அனுப்பி வைக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறியிருக்கிறார்.

ஓஸோன் படலம் சூரிய ஒளிக்கதிர்கள் நேரடியாக பூமியைத் தாக்காமல் தடுக்கும் பணியைச் செய்து வருகிறது;

அன்டார்க்டிக்கா கண்டத்தின் மேல் ஓஸோன் படலத்தில் ஓட்டை ஏற்பட்டுள்ளது: அதனால் சூரிய ஒளிக்கதிர்கள் அவுஸ்திரேலியாவின் தெற்குப் பகுதி, நியூசிலாந்து ஆகிய நாடுகளைப்பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது அப்பகுதி மக்களுக்கு தோல் புற்று நோயை ஏற்படுத்தும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்து உள்ளனர். (எ)

## பீகிங் பல்கலைக்கழகத்துக்கு புதிய தலைவர் நியமனம்

பீகிங் பல்கலைக்கழகத் தலைவர் பதவிக்கு புதியவர் நியமிக்கப்பட்டார்.

56 வயதான வூ சுசிங் தலைவர் பதவியை 62 வயதான பேராசிரியர் டிங் ஷிசுன்னிடமிருந்து பொறுப்பு ஏற்றுக் கொண்டார்:

கடந்த ஜூனில் மாணவர்களின் ஜனநாயகக் கிளர்ச்சி இடம்பெற்றபோது பேராசிரியர் ஷிசுன் தலைவராக இருந்தார்.

இதனிடையில்—சீனக் கலாசார அமைச்சு தனது இளம் ஊழியர்களைக் கிராமப்புறங்களுக்குப் பணிபுரிய அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ளது:

## மகாபாரதம் பார்த்தவர் மயங்கி விழுந்து மரணம்!

ஜல்கல், ஆக 27

இந்திய தூரதர்ஷனில் 'மகாபாரதம்' கதை ஒளிபரப்பப்படுவது தெரிந்ததே;

கடந்த ஞாயிறு இடம் பெற்ற ஒளிபரப்பில் 'திரௌபதி துகிலுரிதல்' காட்சி வந்தது;

மஹாராஷ்டிராவில் ஜல்கன் மாவட்டத்தில் பைஸ்பூர் பட்டினத்தில் பகிரா காஸி என்பவர் துகிலுரியும் கட்டத்தை பார்த்து கலங்கினர்;

துயர் தாங்காது அப்படியே மயங்கி விழுந்து இறந்து போனார்; (எ)

## தனிமையில் வாடும் ருஷ்டி மனைவியும் கைவிட்டார்!

லண்டன், ஆக; 27

இந்த நூற்றாண்டின் பிரச்சினைக்குரிய எழுத்தாளராகக் கருதப்படும் சல்மன் ருஷ்டியை அவரது மனைவி கைவிட்டு விட்டார்;

'சாத்தானின் கவிதைகள்'



ருஷ்டி

என்ற நூலை எழுதியவர் ருஷ்டி; இஸ்லாத்தை அந்த நூல் நிந்திப்பதாகக் கூறி ஈரானின் மறைந்த ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கோமேனி ருஷ்டிக்கு மரணதண்டனை விதித்தது தெரிந்ததே:

அதைத் தொடர்ந்து சல்மன் ருஷ்டி லண்டனில் உள மறைவு வாழ்க்கையை மேற்கொண்டு வருகிறார்.

அவருடன் அவரது மனைவி மரியான் விக்கின்ஸும் வாழ்ந்து வந்தார். இவரும் ஓர் எழுத்தாளர் ஆவார்;

இப்போது மனைவியும் ருஷ்டியைக் கைவிட்டு விட்டதாக பி.ரி.ஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது:

கணவர் ருஷ்டி எங்கு தங்கி இருக்கிறார் என்பது தனக்குத் தெரியாதென மரியான் விக்கின்ஸ் அறிவித்திருக்கிறார்: (எ)

● ஆண்டு தோறும்

## $1\frac{1}{2}$ லட்சம் பேர் புற்று நோய் காரணமாக பங்களாதேஷில் மரணம்!

டாக்கா ஆக. 27

ஆண்டு தோறும் ஒன்றரை லட்சம் பேர் பங்களாதேஷில் புற்றுநோயால் மரணமடைவதாக அறிவிக்கப்படுகிறது:

பங்களாதேஷில் சுமார் 8 லட்சம் பேர் புற்றுநோயாளர்கள் உள்ளனர்;

புதிதாக 2 லட்சம் பேர் புற்றுநோயால்பாதிக்கப்பட்டு வருகின்றனர்;

புகைத்தல், வெற்றிலை பாவிப்பது ஆகிய பழக்கங்களை குறைப்பதன் மூலம் புற்றுநோய் பரவுவதை 40 சதவீதத்தினால் குறைக்கமுடியும் என்று வைத்தியநிபுணர்கள் தெரிவித்துள்ளனர்; (எ)

## 'ஜெ' உதவியாளர் நடராஜன் மீது வழக்குத் தாக்கல்

சென்னை, ஆக 27

அ. தி. மு. க: பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் பிரதம உதவியாளர் திரு: எம். நடராஜன் உட்பட நான்கு பேர் மீது சென்னை நகர பொலீஸினால் நீதிவான் முன்னிலையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டிருப்பதாவது;

1989 ஜனவரி தமிழக சட்டசபைத் தேர்தலில் திருச்செங்கோடு போட்டியிட பி. ரி. தனகோபால் திரு: நடராஜனிடம் 20 ஆயிரம் ரூபா பணம் கொடுத்திருந்தார்;

ஆனால் கட்சி வேட்பாளர் நியமனம் அவருக்கு கிடைக்கவில்லை; ஆகவே கொடுத்த பணத்தை திருப்பித்தருமாறு நடராஜனிடம் தனகோபால் கேட்டார்:

நடராசன் வேறு நான்கு பேருடன் சேர்ந்து தனகோபாலை அறை ஒன்றுக்குள் பூட்டி வைத்துப் பயமுறுத்தினர். பின்னர் தனகோபால் வைத்திருந்த 20 ஆயிரம் ரூபா ரசீதையும் அவர்கள் பறித்துக் கொண்டனர்;

இப்படி குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டிருக்கிறது; (எ)

### அரபாத் முயற்சி

வாஷிங்டன், ஆக: 27

ஐ. நா: சபையின் விசேட பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொள்ளுவதற்காக விஸா கேட்டு அமெரிக்க அரசுக்கு பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத் விண்ணப்பிக்க இருக்கிறார்:

இத்தகவலை 'நியூயோர்க் டைம்ஸ்' நேற்று வெளியிட்டது.

கடந்த ஜூனில் அமெரிக்காவிற்கு விஜயம் செய்ய யாசிர் அரபாத்துக்கு விஸா வழங்க அமெரிக்க அரசு மறுத்திருந்தது தெரிந்ததே.

அதன் காரணமாக ஐ. நா: சபை, பலஸ்தீனம் பற்றிய விசேட மாநாட்டை கடந்த ஜூனில் ஜெனிவாவில் நடத்தியது; (எ)

## பெனஸிரின் உயிருக்கு ஆபத்து; பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்!

இஸ்லாமபாத், ஆக: 27

பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோவுக்கு வழங்கப் பட்டுவரும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது,

தீவிரவாதக்குழு ஒன்று பெனஸிரைத் தாக்கக் கூடும்



பெனஸிர்

என்று மேற்காசிய நாடு ஒன்றில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்திற்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் ஆங்கில நாளிதழ் 'த முஸ்லிம்' செய்தி வெளியிட்டது. (எ)


உ

## 'நல்லூர்க் கந்தன் திருப்புகழ்'

ஆக்கம்:
சோக்கன்

**அன்பளிப்பு:**

**உதயன் பத்திரிகை நிறுவனம்**

திருவள்ளுவர் பதிப்பக வெளியீடு

நல்லூர்க் கந்தனின் இரதோற்சவத் திருநாளில்
(29 08 89 செவ்வாய் மு.ப 10; 00 மணி)
நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனத்தில்
ஆதீனமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளின் அருளாசியோடு
வெளியிட்டு வைக்கப்படும்.

ஈழத்தின் பெயர்பெற்ற இசைக்கலைஞர்கள், பண்ணிசை வல்லார்கள் பக்திப்பாடல்களைப் பக்கவாத்திய சகிதம் பாடுவார்கள்.

நல்லூர்க் கந்தன் அடியார்களை வெளியீட்டுவிழாவிற் கலந்து கொள்ள

**அன்புடன் அழைக்கின்றோம்**

(3301)



## வெற்றுச்சாக்குக் கேள்விப்பத்திரம்

ஊர்காவற்றுறை ப: நோ: கூ: சங்கத்தால் 3454 வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன; கேள்விகளை 'பதில் பொதுமுகாமையாளர்' ஊர்காவற்றுறை ப: நோ: கூ: சங்கம், ஊர்காவற்றுறை என்ற விலாசத்துக்கு 04-09-89 ஆம் திகதி (திங்கட்கிழமை)க்கு முன்னர் நேரடியாக சமர்ப்பிக்கலாம்; விண்ணப்பதாரர் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தியிருத்தல் வேண்டும்: விண்ணப்பப்படிவங்களை ரூபா 2/- செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்;

— பதில் பொதுமுகாமையாளர்

ஊர்காவற்றுறை,
26 - 08 - 1989; [சி-8575]



உ
வைரவர் துணை

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் சுக்கில ஹு ஆவணி மாதம் 12 ஆம் நாள்
(28-08-1989) திங்கட்கிழமை
பகல் 9-15 மணிமுதல் 9-42 மணிவரை
வரும் சுபவேளையில்,

எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட
★ விநாயகர் ஸ்ரோர்ஸ் ★

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடாத்த விருப்பதால், இவ் வமையம் தாங்கள் வருகைதந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்:

இந்திராபுரம், இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
முகமாலை: சி. சிவநாதன்

(1724)



உ

## ★ திருமணத் திருமுகம் ★

அன்புடையீர்!

03-09-1989 ஞாயிற்றுக்கிழமை காலை 7.0 மணிக்கும் 9 00 மணிக்கும் ★ இடையில் வரும் சுபவேளையில் ★

| எமது கனிஷ்ட புத்திரன் டாக்டர் மனோகரனுக்கும் | ★★★★ | எமது கனிஷ்ட புத்திரி டாக்டர் மகாலக்ஷ்மிக்கும் |
|---|---|---|

கனடா, ரொரன்டோ 'தோமா' மண்டபத்தில் திருமணம் நடைபெற பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளது: இவ் அழைப்பிதழை உறவினர்களும், நண்பர்களும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்:

திரு: பொ. சங்கரப்பிள்ளை
(இளைப்பாறிய போக்குவரத்து ஆணையாளர்)
திருமதி ம: சங்கரப்பிள்ளை
5220, Bothwell Road,
Tarzana,
California, 91356,
U: S: A

திருமதி: ஆ முருகேசபிள்ளை
(காலஞ்சென்ற, முன்னாள் யாழ். மேலதிக அரசாங்க அதிபர்)
திரு: தி: முருகேசபிள்ளையின்பாரியார்
455, Naomi cres.
Mississauga.
Ontario, L5 B3 F8
Canada.

[1827]



சாவகச்சேரி நகரசபை

## கேள்வி அறிவித்தல்

**சாவகச்சேரி பஸ் நிலையத்தின் முன்பாகக் கட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை**

1: சாவகச்சேரி பஸ் நிலையத்தின் முன்பாகக் கட்டப்பட்டுள்ள 10 கடைகளிலும் வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 12 - 09 - 89 ஆந் திகதி பிற்பகல் 4-15 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் 11-09-89 ஆம் திகதி பிற்பகல் 12-30 மணி வரை கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 100/- ம், மீளளிப்புச் செய்யப்படும் கேள்விப் பாதுகாப்பு வைப்புப் பணமாக ரூபா 1000/- ம் செலுத்துபவர்களுக்கே வழங்கப்படும்;

3; நிரப்பப்பட்ட கேள்விகள் குறிக்கப்பட்ட தினத்தன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியதாக "தலைவர். நகர சபை, சாவகச்சேரி" என முகவரியிடப்பட்டு. உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கடைகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிடப்பட்டு. பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்: அல்லது இச் சபையின் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் போடப்படல் வேண்டும்:

4. தற்பொழுது இந்நகர சபையின் கடைகளில் ஏதாவது ஒன்றின் பதிவுசெய்யப்பட்ட வாடகைக்காரராக இருப்பவருக்கோ அல்லது அன்னாரது கணவன் / மனைவி எவருக்கேனும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

5 தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் சபையினால் அங்கீகரிக்கப்படும் முறையிலான கதவுகளைத் தங்களது செலவில் தயாரித்துப் பொருத்துதல் வேண்டும்.

6 கடைகளைத் தெரிவுசெய்யும் முன்னுரிமை, கூடிய கேள்வியின் அடிப்படையில் வழங்கப்படும்.

7. தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் கடையைப் பொறுப்பேற்காதுவிடில், அவரது கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப் படமாட்டாது

8 ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது:

9. மேற்படி கடைகளில் கீழ்வரும் வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது:
(அ) பலசரக்கு வியாபாரம்
(ஆ) தேநீர்க் கடை
(இ) மீன் / இறைச்சி / கருவாடு/ இருல்முதலியன விற்பனை செய்தல்;

10. கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ சபைக்குப் பூரண அதிகாரமுண்டு.

11. ஒவ்வொரு கடையின் ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 50, 000/- ஆகும்.

12. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்;

த. நவரத்தினராசா
தலைவருக்காக,
நகர சபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
23 - 08 - 1989

(சி- 3569)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**C. S. K. விசேஷ தசாங்கம்**

இது சாஸ்திர முறைப்படி தயாரித்த தசாங்கம் கோவில்களிலும் வீடுகளிலும் விசேட தினங்களிலும் குழந்தைகளுக்கும் புகை போடச் சிறந்தது:

1 சிறிய பைக்கற் விலை 5/-
1 பெரிய பைக்கற் விலை 10/-

கிடைக்குமிடம்
க. செ. கைலாசப்பிள்ளை அன் சன்ஸ்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.



# உதயன்

28 08 - 1989 திங்கட்கிழமை



**C. S. K. நோஎண்ணெய்**

இந்த எண்ணெ சகலவித நோய்களுக்கும் குத்து உளைவு வீக்கம், கை, கால்களுக்கு போன்ற ரோகங்களுக்கும் அந்தந்த இடத்தில் பூசி வர குணமாகும்

1 அ. விலை 12/-

கிடைக்கும் இடம்
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துக் கடை, யாழ்ப்பாணம்.


ரூ. ஆயிரம் நிவாரணம்

## இன்று இறுதிச் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 28

யாழ். ஸ்ரான்லி வீதி, இலங்கை வங்கிக் கிளையில் மீளக்குடியமர்தலுக்கான முதல் கட்ட நிவாரணத்துக்குப் பெயர் அறிவிக்கப்பட்டும் இதுவரை நிவாரணம் பெறாத 907 குடும்பங்களுக்கு இன்று திங்கட்கிழமை கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

இன்று இவற்றைப் பெறத் தவறுவோரின் பெயர்ப்பட்டியல் யாழ் செயலகத்துக்கு அனுப்பப்பட்டு விடும்.

கந்தர்மடம், நல்லூர் வடக்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் மேற்கு, கொக்குவில் மத்தி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கே இன்று கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. (இ)

## நல்லூரில் சங்கிலி திருட்டு

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்றுக்காலை மாம்பழத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஏராளமான பக்தர்கள் கூட்டம் திரண்டிருந்தது. அப்போது உள் வீதியில் 40 வயதுடைய ஒரு பெண்மணியிடம் இருந்து ஒன்றரைப் பவுண் சங்கிலி திருட்டுப் போயிற்று.

அதே நேரம் உள்வீதியில் இன்னும் பல பெண்களிடம் இருந்து 'பேர்ஸ்' மற்றும் கைப்பை போன்றவையும் அபேஸ் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)


உ

புது வியாபார ஸ்தாபன அழைப்பிதழ்

★ கணேசன் ஸ்டோர்ஸ் ★

5, மானிப்பாய் வீதி, கைதடி!

அன்புடையீர்!
நிகழும் சுக்ில வருஷம் ஆவணி மாதம் 12ஆம் திகதி திங்கட்கிழமை (28- 08- 89) காலை 9- 27 முதல் 10- 25 வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற

★ கணேசன் ஸ்டோர்ஸ் ★

என்னும் வியாபார ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவிருக்கிறோம் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழ வருகை தந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை நாடும்,
கைதடிச்சந்தி, R S கணேசன்,
கைதடி. V. K. ரிஷிகேஸ்வரன்.

[1830]



## தவறிவிட்டது

நல்லூர் கந்தனைத் தரிசிக்க கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் 30ஸ்ரீ2629 மினிபஸ்ஸில் 26-08-89 இல் பயணம் செய்த ஒரு பெண்மணி தனது உடுப்பு பாக்கை (bag) தவற விட்டுவிட்டார். கண்டு எடுத்தவர்கள் தயவு கூர்ந்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(1904)



## அறிவித்தல்

இன்று முதல் எமது ஸ்தாபனத்தில் சகல வகையான ஐஸ் கிறீம் மற்றும் குளிர்பானங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**ராஜா கிறீம் ஹவுஸ்**

36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(1747)



✶ அந்தியகால சேவையில் முதிர்ச்சி பெற்றவர்களது நவீன ஸ்தாபனம்!
✶ குடாநாட்டில் சகல கிராமங்களுக்கும் எமது சேவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

**பிறைற் ஹவுஸ்**

(புனித யாகப்பர் ஆலய அருகில்)
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(C/3576)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 298/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28-08-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


## பேசாலை வாசி மரணம்!

கடந்த சில தினங்களுக்கு முன் பேசாலை பகுதியில் இடம் பெற்ற ஷெல் வீச்சில் காயமடைந்து, யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று மரணமானார்.

மரணமானவர் பேசாலையைச் சேர்ந்த எம். பத்திநாதர் என்பவர் ஆவார். (ஓ-9)

## மினிபஸ் விபத்து; நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 28

காங்கேசன்துறை வீதியில், கொக்குவிலுக்குச் சமீபமாக நேற்று நண்பகல் மினிபஸ் ஒன்று தடம்புரண்டது. அந்த விபத்தில் நால்வர் காயமடைந்தனர். (ஓ-9)

காபந்து-

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட வேண்டும்.

★ நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியன மீண்டும் நடத்தப்பட வேண்டும்;

★ பிரதமர் தலைமையிலான அரச நிர்வாகம் மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும்:

— இப்படி கூட்டறிக்கையில் கூறப்பட்டு உள்ளது. (ஓ-எ)

பளை பகுதியில்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறப்பட்டது.

பளைப் பட்டணத்தில் காணப்பட்ட சடலம் நேற்றுப் பகல் வரை அடையாளம் காணப்படவில்லை.

அதுவும் மாசாரைச் சேர்ந்த ஒருவரது சடலமாக இருக்கக் கூடும் என்று சொல்லப்பட்டது. (ஓ-117)

ஈரோஸ்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேதீஸ், ஜெயந்திரன், சந்திரன், ராஜூ, காந்தளப்பன், அருள்ராஜ், கார்த்திகேசு ரவீந்திரன், சுப்பிரமணியம் புனிதராஜன், வசந்தாப்பிள்ளை பேரின்பராஜா ஆகியோர் கடத்தப்பட்டனர். இது குறித்து அமைதிப்படையிடம் முறையிடப்பட்டது அதை அடுத்து தோழர்கள் கேதீஸ், ஜெயந்திரன், சந்திரன் ஆகியோர் விடுவிக்கப்பட்டனர். ஏனைய ஐந்து தோழர்களுக்கு என்ன நடந்ததென எதுவித தகவலும் இல்லை.

★ அம்பாறை மாவட்டத்தில் எமது அமைப்பின் ஆதரவாளர்கள் பலர் நேற்று முன்தினம் தாக்கப்பட்டு சித்திரைவதைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

★ நேற்று பிற்பகல் 1. 30 மணியளவில் வீரமுனையைச் சேர்ந்த தோழர் ரவியும் அவரது சகோதரரும் கடத்தப்பட்டனர். (ஓ)

ஜனசக்தி--

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வியா.

5 ஆவது தொகுதி

சண்டிலிப்பாய், தீவுப்பகுதிகள், மண்முனை, சம்மாந்துறை, ஈச்சிலம்பத்தை.

6 ஆவது தொகுதி

கரவெட்டி, மண்முனை தெற்கு, எருவில்பற்று, நிந்தவூர், மொரவேவா.

7 ஆவது தொகுதி

சாவகச்சேரி, மண்முனை மேற்கு, லகுகல, காரைதீவு தம்பலகமம்.

8 ஆவது தொகுதி

பருத்தித்துறை, கோறளைப் பற்று வடக்கு, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, குச்சவெளி.

9 ஆவது தொகுதி

உடுவில், தெல்லிப்பழை, காத்தான்குடி, உகனை, தெஹியட்டகண்டிய, கோமரங்கடவல.

10 ஆவது தொகுதி

கோப்பாய், நல்லூர், பண்முனை வடக்கு, அம்பாறை, தமனை, கந்தளாய்.

★ பதினொராவது தொகுதியில் வடக்கு, கிழக்கில் எந்தவொரு பகுதியும் இடம்பெறவில்லை. (ஓ-எ)

## பாடசாலைகளை இயங்க வைக்க..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் குறித்தும் நேற்று மாநாட்டில் நீண்ட நேரம் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

மாநாட்டில் பாடசாலைகளை இயங்கச்செய்வது சம்பந்தமான சாத்திய, அசாத்தியங்கள் விரிவாக ஆராயப்பட்டன என்று தெரியவந்தது.

ஒரு சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும், அவை சம்பந்தமாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முயற்சிகள் மேற்கொண்டபின்னர், அவற்றின் பெறுபேறுகளை அனுசரித்தே திட்டவட்டமான முடிவுகளை மேற்கொள்வது எனவும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

பாடசாலைகளை வழமை போல இயங்கச் செய்வது குறித்து செய்யப்பட்ட முக்கிய முடிவுகளில், விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டதும் அடங்கும் என அறியவந்தது.

பிரஸ்தாப விசேட குழு, பாடசாலைகளை இயங்க வைப்பது தொடர்பாக, அதற்குத் தடங்கலாக உள்ள காரணிகளைக் கண்டறிந்து, வேண்டிய இடங்களுடன் தொடர்பு கொண்டு ஆக்கபூர்வமாக முயற்சி செய்யும் என அறியவருகிறது.

ஆக்கபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் அப்போதைய நிலைப்பாட்டை விளக்கி அறிக்கை ஒன்றை வெளியிடத் தீர்மானமாகியதாகவும் தெரிகிறது. (அ-9)

## பொலீஸாரின் பிள்ளைகள் ஆயுதப்பயிற்சி பெறுகிறார்கள்

### தங்கள் குடும்பங்களைக் காப்பாற்ற

கொழும்பு, ஆக 28

பொலீஸாரின் வயதுவந்த பிள்ளைகளுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கப்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தங்களது குடும்பங்களைக் காப்பாற்ற தமக்கு ஆயுதப் பயிற்சிவழங்கவேண்டும் என்று பொலீஸாரின் பிள்ளைகள் கோரியதைத் தொடர்ந்தே இப்பயிற்சி வழங்கப்படுவதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ எ)


## மரண அறிவித்தல்கள்

### திரு. சுப்பையா கந்தசாமி

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சட்டநாதர் வீதியில் வசிப்பவருமான சுப்பையா கந்தசாமி (வ. போ. ச. சாரதி) காலமானார். அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கனகம்மா, நித்தியலெட்சுமி, சரஸ்வதி, மகேஸ்வரி, ஜெயலட்சுமி, காலஞ்சென்ற அருள்ராசா, தியாகராசா, தருமராசா ஆகியோரின் சகோதரரும் நடராசா, கதிர்காமத்தம்பி, ஜோச்முத்து மகாலிங்கம், குணரட்ணம் (தெய்வேந்திரா தியேட்டர் உரிமையாளர்) ஆகியோரின் மைத்துனரும் கௌசலாதேவி, புஷ்பாதேவி, புஸ்பராசா (இ. போ. ச. கோண்டாவில்) ரஞ்சிதாதேவி, தங்கராசா, கமலாதேவி, ரவீந்திரராசா, நவரட்ணம், காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் தகப்பனாரும் நவரத்தினம், நாகேந்திரராசா, தர்மகுலசிங்கம், சிவநாயகம் சிவானந்தன், சரோஜினி, பமிற்று ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (28—8—89) மாலை 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

தகவல்
ஜெயா

(1836)

### திரு. அழகு யேசுராசா

அழகு யேசுராசா அகால மரணம் அடைந்தார். இவர் திரு. திருமதி அழகு தம்பதிகளின் அன்புப் புதல்வனும், பிலோமினாவின் அன்புக் கணவனும், கிங்சிலி, தீபா, திலீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். இவர் பிரேமா, ராஜன், ஸ்ரீ, வசந்தா, சாந்தி, யோய், பரீனா, நேசா, தயான், றீகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ருவிக் தவராசா, மங்களராசா ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை 28-8-89 மாலை 3-30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

20/10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மங்களராசா
(மைத்துனர்)

(1905)

### சோமசுந்தரம் லூசியா (சின்னமலர்)

பாஷையூரைச் சேர்ந்த சோமசுந்தரம் லூசியா அவர்கள் காலமாகிவிட்டார். இவர் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் சோபனாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கஸ்பார் மதலேனா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற மரியதாஸ், கிளாறம்மா, லில்லி, ரோசா, லீலா, பவிலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் நாளை மாலை 5 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
வே. நல்லதம்பி

[illegible] வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(1837)



## மரண அறிவித்தல்கள்

### செல்வன் நடராசா ஐங்கரன்

[யாழ். மத்திய கல்லூரி, 5 ஆம் வருட மாணவன்]

செல்வன் நடராசா ஐங்கரன் காலமானார். இவர் நடராஜா (நடராஜா அன் பிறதர்ஸ், திருநெல்வேலி சந்தி) - பாக்கியலக்ஷ்மி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், றஜனி, பாஸ்கரன், பிரபாகரன், நிசாகரன், சசிகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28 8-89 திங்கட்கிழமை (இன்று) காலை 10 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா. நடராஜா

12/1, கந்தப்புராண வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(1907)

### திரு. சு. மயில்வாகனம்

(ACCOUNTANT)

(Former Secretary Accountant S. H. S. office Jaffna, Former Director of Finance Ministry of Agriculture, Presently Director of Finance Land Reforms Commission)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற திரு. சிவகுருநாதர் சுப்பையா - திருமதி இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின், சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற. கொக்குவில் சட்டத்தரணி ஞானசுந்தரம், திருமதி. செல்லம்மா ஆகியோரின் மருமகனும், 1203 கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமான, திரு. சுப்பையா மயில்வாகனம் (25 - 8 - 89) சிவபதமடைந்தார்.

அன்னார், ஞானரஞ்சிதத்தின் அன்புக்கணவரும், ரகுவரன் (லண்டன்), வனஜா (அன்ரிகுவா), அகிலன் (லண்டன்), சிறீதரன் (யாழ். மருத்துவக்கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லவராகினிதேவி (லண்டன்), Dr. விக்கினராஜா (அன்ரிகுவா), ஆகியோரின். அன்பு மாமனாரும், கோபி, ரமேஷ், சங்கரி, ஆகியோரின், அன்புப் பேரனும், தவமணி, சிவகுரு (யாழ். மாவட்டப் பணிப்பாளர் கமத்தொழில் காப்புறுதிச்சபை), ஆகியோரின், அன்புச் சகோதரரும், ஞானம்பிகை, ஞானபாக்கியம், ஞானசகுந்தலா, காலஞ்சென்ற ஞானசம்பந்தர், ஞானம்பாள். ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரிகை (28-8-89) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன் ஸ்ரீதரன்

1203 K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

[1908]

### திரு. கிருஷ்ணசாமி ஆனந்தசுந்தரம்

உடுப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவில் கிழக்கினை வசிப்பிடமாக கொண்டவருமாகிய திரு. கிருஷ்ணசாமி ஆனந்தசுந்தரம் (ஓய்வு பெற்ற D. O. A. கட்டிடத் திணைக்களம் யாழ்ப்பாணம்) அவர்கள் 27- 8- 89 அன்று நண்பகல் காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற திரு. திருமதி, கிருஷ்ணசாமி தம்பதிகளின் அன்பு மகனும், திரு. திருமதி நடராசா பத்தர் தம்பதிகளின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், திரு. ஆனந்த கணேசன் திருமதி. பாக்கியலட்சுமி, காலம் சென்ற திரு சிவசுப்பிரமணியம், திரு. சண்முகசுந்தரம் (உதவி பணிப்பாளர் நீர்ப்பாசன திணைக்களம் - கொழும்பு ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருஷ்ணராஜா C. S. O. Nallur சென்ஜோன்ஸ் ஆன்புலன்ஸ் படை), மங்களநாகநாயகி, வேதநாயகி, முகிராணன். சகுணராஜா, தேவநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 29- 8- 89 செவ்வாய்க்கிழமை நண்பகலளவில் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மனைவி, பிள்ளைகள்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(1906)

### திரு. சுப்பிரமணியம் பூரணலிங்கம்

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் பூரணலிங்கம் 27. 8 89 காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மகனும், தையல் பூரணலிங்கத்தின் அன்புக் கணவனும் (பார்மசிற் L. R. H.) புஸ்பகுமார் பத்மகுமார், டில்லுக்சி, டீப்திகா (H. F. C. COL. 3) யின் அன்புத் தந்தையும் ஆவார்.

இவரது மரணச்சடங்கு கோப்பாயில் 28. 8. 89ல் மாலை 3 மணிக்கு நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ந. சிவராசா

(1835)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org